இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 256 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – சித்திரை 14 – திங்கள்கிழமை 27 ஏப்ரல் 2026 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 256 : Thiruvalluvar Year - 2057 - Chithirai 14 - Monday 27 April 2026 - Dak 8 Pages ₹ 5.00





முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கொடைக்கானலில் நேற்று நடைபயிற்சி மேற்கொண்டபோது பொதுமக்கள் சந்தித்து மகிழ்ச்சியுடன் கை குலுக்கி வாழ்த்துத் தெரிவித்தனர்!

## கொடைக்கானலில் நடைபயிற்சி மேற்கொண்ட

# முதல்வர் மு.க.ஸ்டாலினுடன் பொதுமக்கள் சந்திப்பு!

## செல்ஃபி எடுத்து கை குலுக்கி வாழ்த்துத் தெரிவித்தனர்!

**கொடைக்கானல், ஏப். 27 - கொடைக்கானலில் நடைபயிற்சி மேற்கொண்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன், ஏராளமான பொது மக்களும் சுற்றுலாப் பயணிகளும் செல்ஃபி எடுத்துக்கொண்டும், கை குலுக்கியும் வாழ்த்து தெரிவித்தனர்.**

சட்டப்பேரவைத் தேர்தல் கடந்த 23ம் தேதி முடிவடைந்தது. வாக்கு எண்ணிக்கை மே 4ம் தேதி நடைபெற உள்ளது.

தேர்தலையொட்டி, முதலமைச்சரும் - தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக பல்வேறு மாவட்டங்களுக்கும் தொடர்ச்சியாக சுற்றுப்பயணம் மேற்கொண்டு, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களுக்கு தீவிர பிரச்சாரம் மேற்கொண்டார்.

தற்போது வாக்குப்பதிவு முடிவடைந்த நிலையில், குடும்பத்தினருடன் கொடைக்கானலில் ஓய்வெடுக்க சென்றுள்ளார்.

### பொதுமக்கள் உற்சாக வரவேற்பு!

சென்னையில் இருந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், தனது குடும்பத்தினருடன் தனி விமானத்தில் மதுரைக்கு வந்தார். பின்னர் அங்கிருந்து கார் மூலம் கொடைக் கானல் வருகை தந்தார்.

வழிநெடுகிலும் சாலையோரம் திரண்ட தி.மு.க.வினர் மற்றும் பொதுமக்கள் முதலமைச்சருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். பொதுமக்களுக்கு கையசைத்தபடி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்றார். வத்தலக் குண்டு, காட்ரோடு, பெருமாள் மலை, மூஞ்சிக்கல் ஆகிய இடங்களிலும் ஏராளமானோர் திரண்டு முதலமைச்சருக்கு கையசைத்தபடி வாழ்த்துத் தெரிவித்தனர்.

முன்னதாக தேவதானப்பட்டி அருகே கெங்குவார் பட்டியில் உள்ள கவிப்பேரரசு வைரமுத்துவின் தோட்டத்துக்கு சென்று சிறிது நேரம் ஓய்வு எடுத்தார்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொடைக்கானலில் நேற்று (26.04.2026) நடைபயிற்சி மேற்கொண்டபோது, பொதுமக்கள் செல்ஃபி எடுத்து மகிழ்ந்தனர்!

பின்னர் கொடைக்கானல் வந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாம்பார்புரம் பகுதியில் உள்ள தனியார் விடுதியில் குடும்பத்துடன் தங்கியுள்ளார். முதல்வர் வருகையை முன்னிட்டு கொடைக் கானலில் ஏராளமான போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுப்பட்டுள்ளனர்.

### நடைபயிற்சி மேற்கொண்டார்!

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தினமும் காலையில் விடுதி வளாகம் அல்லது நட்சத்திர ஏரியில் நடைபயிற்சி மேற்கொள்வார் என அறிவிக்கப்பட்டு இருந்தது.

அதன்படி நேற்று காலையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நட்சத்திர ஏரியில் நடைபயிற்சி மேற்கொண்டார்.

அப்போது அதே பகுதியில் நடைபயிற்சி மேற்கொண்ட பொதுமக்கள் அவருடன் உற்சாகமாக ‘செல்பி’ எடுத்துக் கொண்டனர்.

### தூய்மை பணியாளர்களுடன் கலந்துரையாடினார்!

மேலும், ஏரியில் தூய்மை பணி மேற்கொண்ட தொழிலாளர்களையும் வரவழைத்து அவர்களிடம் பணி செய்யும் விபரம், நேரம், சம்பளம் உள்ளிட்ட விபரங்களை கேட்டறிந்தார். தூய்மை பணியாளர்களுடனும் புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

முதலமைச்சர் நடை பயிற்சி மேற்கொண்டதை அறிந்து பொது மக்கள் மற்றும் குழந்தைகள் ஆர்வமுடன் வந்து அவருடன் செல்பி எடுத்துக் கொண்டனர்.

முதலமைச்சர் வருகையை முன்னிட்டு வருகிற 30ந் தேதி வரை கொடைக்கானலில் டிரோன்கள், ஆள் இல்லா விமானங்கள் பறக்க தடை விதித்து மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டு உள்ளார்.

அதே நேரம் சுற்றுலா பயணிகளுக்கு எந்தவித கட்டுப்பாடுகளும் விதிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

---

## 142 தொகுதிகளில் 29ம் தேதி இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு!

# மேற்கு வங்கத்தில் இன்று பிரச்சாரம் ஓய்கிறது!

## பவானிப்பூரில் மம்தா பானர்ஜி போட்டி!

கொல்கத்தா, ஏப்.27-

மேற்கு வங்க சட்டசபை இந்த தேர்தலின் இறுதிக் கட்ட வாக்குப்பதிவை ஒட்டி தான் நாளை பிரசாரம் ஓய்வதால் தேர்தல் களம் தற்போது உச்சகட்ட பரபரப்பை எட்டியுள்ளது.

மேற்குவங்க மாநிலத்தில் கடந்த 23ம் தேதி நடந்த முதற்கட்ட தேர்தலில் மொத்தம் 16 மாவட்டங்களில் உள்ள 152 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடந்தது.

இதில் 1478 வேட்பாளர்கள் போட்டியிட்ட நிலையில், 1951ம் ஆண்டிற்குப் பிறகு மிக அதிகமாக 92.03 சதவீதம் வாக்குகள் பதிவானது. முதற்கட்ட தேர்தலின் போது முர்ஷிதாபாத், மாவட்டத்தின் டொம்கல் மற்றும் ராணிநகர், தக்ஷின், தினாஜ்பூர் மாவட்டத்தின் குமார்கஞ்ச் மற்றும் பிரபூம் பகுதிகளில் சில வன்முறைச் சம்பவங்கள் நடந்தன. பாதுகாப்பு பணிக்காக 2,450 கம்பெனி ஒன்றிய ஆயுதப் படை போலீசார் பணியில் ஈடுப்படுத்தப்பட்டனர்.

இதன் தொடர்ச்சியாக வரும் 29ம் (புதன்கிழமை) தேதி இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. இதற்கான பிரசாரம் வரும் 27ம் தேதி இன்று மாலை 6 மணியுடன் முடிவடைகிறது. கொல்கத்தா மற்றும் வட 24 பர்கானா உள்ளிட்ட பகுதிகளில் உள்ள 142 தொகுதிகளில் இந்தத் தேர்தல் நடக்க உள்ளது. இதில் 1,200க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் போட்டியிட வாய்ப்புள்ளது. மாநிலம் முழுவதும் உள்ள 80,719 வாக்குச்சாவடிகளில், இரண்டாம் கட்டத்திற்காக மட்டும் 40,000 சாவடிகள் தயார் செய்யப்பட்டுள்ளன. இந்த கட்டத்தில் முதல்வர் மம்தா பானர்ஜி மற்றும் பா.ஜ.க.வின் சுவேந்து அதிகாரி ஆகியோர் பவானிப்பூர் தொகுதி யில் நேரடியாக மோதுவது பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் அபிஷேக் பானர்ஜி, காங்கிரஸ் கட்சியின் அதிர் ரஞ்சன் சவுத்ரி மற்றும் இடதுசாரி முன்னணியின் முகமது சலீம் ஆகியோர் களம் காணும் இடங்களிலும் போட்டி பலமாக உள்ளது. இந்தப் பகுதிகள் மிகவும் பதற்றமானவை என்பதால் 2,000 முதல் 2,200 கம்பெனி ஒன்றியப் படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

வெளிநபர்கள் ஊடுருவுவதைத் தடுக்கவங்கதேசம் மற்றும் அண்டை மாநில எல்லைகள் மூடப்பட்டுள்ளன. பிரதமர் மோடி உள்துறை அமைச்சர் அமித்ஷா, காங்கிரஸ் தலைவர் கார்கே, ராகுல்காந்தி போன்ற தலைவர்கள் இறுதி கட்ட பிரசாரத்தில் இறங்கியுள்ளனர்.

வரும் மே 4ம் தேதி தமிழ்நாடு, மேற்குவங்கம், அசாம், புதுச்சேரி, கேரளா ஆகிய மாநிலங்களில் நடந்த தேர்தலின் வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன.

---

## கவுண்ட் டவுன்

